பக்கங்கள்: 11 | விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 12 செவ்வாய்க்கிழமை 28.09.2021 கதிர் 327

**இனி இது ரகசியம் அல்ல!**

அமுல்பேபியின் அலப்பறை தொடர்வது பற்றித்தான் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு – யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கொழும்பிலும்தான்.

ஆனால் இரண்டிலும் வித்தியாசமான காரணங்களுக்காக என்பதுதான் விடயம். பக்கம்02 »

# ‘தில்’ இருந்தால் தேர்தலை உடன் நடத்திக் காட்டுங்கள்



## அரசுக்கு சஜித் சவால்

நாட்டு மக்களின் எதிர்ப்பலைகளுக்கு அஞ்சி மாகாண சபைத் தேர்தலை மேலும் பல மாதங்களுக்கு ஒத்திவைக்க அரசு முயல்கின்றது. அரசுக்குத் துணிவு இருந்தால் காலம் தாழ்த்தாது உரிய காலத்துக்குள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல்களை நடத்திக் காட்ட வேண்டும்.

– இவ்வாறு சவால் விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித். ☞ 11

## மேலும் 51 பேர் சாவு; மொத்தக் காவு 12,731

### நாளாந்த மரணங்களில் வீழ்ச்சி

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 51 பேர் சாவடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 731 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. ☞ 2

## இலங்கையில் 112 நாள்களின் பின் நேற்று 1000 இற்கும் குறைவான தொற்றாளர்கள்

இலங்கையில் 112 நாள்களின் பின்னர் நாளொன்றில் ஆயிரத்துக்கும் குறைவான கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத்தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 14 ஆயிரத்து 592 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேலும் 812 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் இதுவரை 4 இலட்சத்து 55 ஆயிரத்து 344 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

## தொற்றாளர்கள் குறைந்தாலும் அபாயம் இன்னும் நீங்கவில்லை

### பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை



கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் நாளாந்த எண்ணிக்கை குறைவடைந்திருந்தாலும், கொரோனா வைரஸ் பரவுவதற்கான அவதானம் இன்னும் குறைவடையவில்லை. எனவே, சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றி அனைவரும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

– இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் ☞ 2

## அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு அமைச்சரவை அனுமதி



அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சரவை நேற்றிரவு கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரிசி மீதான அதிகபட்ச மொத்த மற்றும் சில்லறை விலை குறித்த வர்த்தமானி இரத்துச்செய்யப்படவுள்ளது.

இதேவேளை, கையிருப்பைப் பேணும் ☞ 2

## ‘டிக் டொக்’கில் வாளுடன் வலம் வந்தவர் சிக்கினார்



வாளுடன் ‘டிக் டொக்’ வலைத் தளத்தில் காணொலியைப் பதிவு செய்து வெளியிட்ட 18 வயது இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சங்கானையைச் ☞ 11

## வலி.வடக்கில் மீளக் கையகப்படுத்தப்படும் காணிகளை நேரில் பார்வையிட்ட சுமந்திரன்



நல்லாட்சி அரசின் காலத்தில் வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளை இராணுவத்தினர் மீளக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையில் அப்பகுதிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நேரில் சென்று ஆராய்ந்தார்.

வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் ☞ 2

## ஒக். முதலாம் திகதி நாட்டை மீளத் திறக்க சுகாதாரப் பரிந்துரைகளை முன்வைக்குக



### அனைத்துப் பிரிவினருக்கும் ஜனாதிபதி பணிப்புரை

தனிமைப்படுத்தல்ஊரடங்கை எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி தளர்த்துவதற்குத் தேவையான உரிய சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய பரிந்துரைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்துப் பிரிவினருக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய, சுகாதார, போக்குவரத்து மற்றும் ஏனைய பிரிவுகளினால் இந்தப் பரிந்துரைகள் வழங்கப்படவுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ☞ 2

## வைத்தியர் வீட்டில் திருட்டில் ஈடுபட்ட இளைஞன் கைது!

யாழ்., கொழும்புத்துறை – இலந்தைக்குளம் வீதியில் ஓய்வு பெற்ற மருத்துவ தம்பதியரின் வீட்டில் இரவு வேளையில் திருட்டில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து திருடப்பட்ட பொருள்களான ஐபாட் மற்றும் இரண்டு ☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். மாவட்டத்தில் அரச உதவியின் கீழ் வீட்டுத் திட்ட வாய்ப்பைப் பெறும் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் நடந்த குளறுபடிகளும் மறு விசாரணைகளும் வாசகர்கள் அறிந்தவைதான்.

அமுல்பேபியின் ஆதரவுக் கும்பலினால் தவறாக உள்நுழைக்கப்பட்ட சுமார் முந்நூறு பயனாளிகள் மீள் விசாரணைகளில் வாய்ப்பிழந்தனர். உண்மையில் பாதிப்பின் அடிப்படையில் அந்த வீட்டுத் திட்டத்தைப் பெற உரித்துடையவர்கள் சரி செய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.

அதனடிப்படையில் பிரதேச செயலக ரீதியாக அனேகமாக அனைத்துப் பட்டியல்களும் அங்கீகரிக்கப்பட்டு திட்டங்கள் செயற்படத் தொடங்கிவிட்டன – சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவைத் தவிர.

அந்தப் பிரதேச செயலகப் பிரிவில் ஐம்பதுக்கு மேற்பட்ட பயனாளிகள் தெரிவில் சுத்துமாத்து இடம்பெற்றமை கண்டு பிடிக்கப்பட்டு, மீள் விசாரணையில் விவகாரங்கள் ஆராயப்பட்டு, சரியான பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டது. ஆனால் அமுல்பேபியின் அலுவலகத்தைத் தாண்ட முடியாமல் அந்தப் பட்டியல் தேங்கிக் கிடக்கின்றமையால், அரச உதவித் திட்டத்தைப் பெற முடியாமல் அந்தப் பயனாளிகள் கஷ்டப்படுகின்றனர்.

தவறான பயனாளிகள் என்று கண்டு பிடிக்கப்பட்டு, பெயர் வெட்டப்பட்டவர்களில் இருபது பேரின் வீடுகளுக்கு, அரச உதவித் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு அனுமதி வர முன்னரே, அமுல்பேபியின் அடியாள்கள் குழு போய், வீடு கட்டுவதற்கான அடிக்கல்லை ஆரவாரத்துடன் நட்டுவிட்டதாகத் தெரிகின்றது.

இப்போது சரியான பயனாளிகள் பெயர் விவரம் அடங்கிய பட்டியல் வெளியானால், அமுல்பேபியின் ஆதரவாளர்களாகத் தம்மைக் காட்டி உதவித் திட்டம் பெற முயன்ற அந்த இருபதுக்கும் மேற்பட்ட குடும்பங்களும் தங்களை முறைத்துக் கொள்ளும், அவர்களுக்கு எப்படி முகம் கொடுப்பது என்று கருதி, அந்தப் பட்டியலை சிறைப்படுத்தி வைத்துள்ளது அமுல்பேபி அண்ட் கோ.

பாவம், உண்மையான – தகுதியான – பாதிக்கப்பட்ட – இந்தத் திட்டத்தைப் பெறும் அடிப்படைகளைக் கொண்ட – பயனாளிகளின் குடும்பங்கள்.

அமுல்பேபி அண்ட் கோவின் அலப்பறையால் அரச உதவித் திட்டம் கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத அவலத்தில் அவர்கள்.

இதற்கிடையில் இந்த வீட்டுத் திட்ட செயற்பாட்டில் அமுல்பேபி அண்ட் கோவின் சுத்துமாத்து அம்பலமானமையைத் தொடர்ந்து, அந்த விடயத்தில் அடுத்த சுற்றுக் குழப்பத்துக்கு அமுல்பேபி குறூப் தயாராகி விட்டது என்று தகவல்.

ஏற்கனவே வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவில் குளறுபடி என்று கண்டு பிடிக்கப்பட்டு முறைப்பாடுகள் செய்யப் பட்டமையால் பிரதேச செயலக ரீதியிலும், மாவட்ட ரீதியிலும் பயனாளிகள் பட்டியல் மீள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன. மேன் முறையீடுகள் செய்வதற்கும் மீளாய்வுக்கும் வசதிகள் அளிக்கப்பட்டன. அதன் பின்னரே தகுதியற்றவர்கள் என அவதானிக்கப்பட்டோரின் பெயர்கள் புள்ளி விவரங்களின் அடிப்படையில் நீக்கப்பட்டு, தகுதியுடையோர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, இறுதியாக்கப்பட்டது. தொண்ணூறு வீதமான பிரதேச செயலகங்களில் அத் திட்டம் நடைமுறைக்கும் வந்து விட்டது.

இந்நிலையில் இப்போது, மேன் முறையீடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பட்டியல் தவறானது என்று அமுல்பேபியின் தரப்பினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவை பற்றி விசாரிப்பதற்கு மூன்று அரச அதிகாரிகளைக் கொண்ட உயர்குழுவை அரச அதிபர் இன்று நியமிக்க இருக்கின்றார் எனத் தெரிகின்றது.

மூன்று அரச அதிகாரிகளின் விசாரணையும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டு விட்டுப் பார்ப்பது போல நோக்கற்படும். அமுல்பேபியின் ராகத்துக்கு அவர்கள் நடனமாடினால் விவகாரம் சந்தி சிரிக்கும் விடயமாகும் என்பதும் எதிர்பார்க்கத் தக்கதே. ஆகவே மூன்று அதிகாரிகள் முழு நேர்மையாகச் செயற்படுவர் என எதிர்பார்க்கலாம்.

இதுதான் யாழ்ப்பாணத்து அதிகாரிகள் அமுல்பேபி குறித்துப் பேசுவது. அப்படியானால் கொழும்பு அதிகாரிகள் என்ன பேசுகின்றார்கள்? அதுவும் அறிய சுவாரஸியமானதுதான்.

பிரதமரின் இணைப்புச் செயலாளர் ஒருவர் வடக்கு, கிழக்கு புனர்நிர்மாணப் பணிகளுக்கான அரசின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார் அல்லவா?

காசிலிங்கம் கீதநாத் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டமையால் தமது சுத்துமாத்துகளுக்கு நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக அமுல்பேபி தரப்பு சீறுகின்றது.

இதன் காரணமாக கொழும்பில் உயர் மட்டங்களுக்கு அமுல்பேபி, அவரின் பிரத்தியேகச் செயலாளரான தந்தையார் என்று பல தரப்புகளில் இருந்தும் கடிதங்கள், கடிதங்களாக முறைப்பாடுகள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான குற்றச்சாட்டுப் பட்டோலை.

முதலில் தனது மாவட்ட ரீதியான அதிகாரத்தின் பெயரால் ஜனாதிபதிக்கு முறைப்பாடு அனுப்பினார் அமுல்பேபி. சம்பந்தப்பட்ட அலுவலர் பிரமரின் பணியாளர் தொகுதியைச் சேர்ந்தவர் என்பதால் முறைப்பாடு ஜனாதிபதியின் தரப்பினால் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பிரமரிடம், அவரின் செயலாளர் ஒருவர் இந்த முறைப்பாட்டுக் கடிதத்தை எடுத்துச் சென்றார். ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து இப்படித் திருப்பி விடப்பட்டிருக்கின்றது என்றார்.

பிரதமரோ, சிரித்தார். *"இந்த விடயங்களைக் கையாளத்தான் அவரை (கீதநாத்தை) நான் யாழ்ப்பாணம் அனுப்பியிருக்கிறேன். அதனால் இத்தகைய எதிர்ப்புகள் வரத்தான் செய்யும்"* – என்று சிரித்துக் கொண்டு கூறிப் புறமொதுக்கி விட்டார் பிரதமர் என அறிய வந்தது

ஆனால் அமுல்பேபி அணி புதிது புதிதாக ஒவ்வொரு முறைப்பாட்டு மனுக்களை வெவ்வேறு தரப்புகளுக்கு சளைக்காமல் அனுப்பிக் கொண்டிருக்கின்றது. பார்த்தார்கள் அதிகாரிகள். ஒரே தொல்லையாகத் இருக்கின்றது என்று கருதி அப்படியே தூக்கி, புலனாய்வுப் பிரிவிடம் இவ்வளவு குற்றச்சட்டுகள் குறித்தும் விசாரித்து அறிக்கை தாருங்கள் என்று முழு முறைப்பாடுகளையும் கொடுத்து விட்டார்கள்.

அமுல்பேபி தரப்பின் குற்றச்சாட்டுகள் வெறும் இத்துப்போன கயிறுகள் என்ற விவரத்தைப் புலனாய்வுப் பிரிவுகள் கண்டுபிடித்து அறிக்கை அனுப்பியிருப்பதாகத் தெரிகின்றது.

அமுல்பேபி தரப்பின் உப்புச் சப்பற்ற முறைப்பாட்டுப் 'பெட்டிஷன்'தான் கொழும்பு அதிகாரிகள் சிலர் மட்டத்தில் பேசு பொருள்.

எது, எப்படி என்றாலும் – சந்தி சிரிக்கும் விடயம் என்றாலும் – அதிகாரிகள் மட்டத்தில் அமுல்பேபி பேசுபொருளாக இருப்பதும் கூட ஓர் அரசியல் வெற்றி தானே...!

– மின்னல் –

---

## தொற்றாளர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்ததாவது:–

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஓரளவு குறைவடைந்திருந்தாலும், இன்னமும் நாளொன்றுக்கு ஆயிரம் வரை தொற்றாளர்கள் பதிவாகின்றனர். அதேபோல நாட்டில் பல இடங்களிலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். எனவே, இந்த நிலைமை தொடர்பில் நூறுவீதம் திருப்திகொள்ள முடியாது.

வைரஸ் பரவுவதற்கான அவதானம் குறையவில்லை. எனவே, எதிர்வரும் முதலாம் திகதி நாட்டைத் திறப்பதாக இருந்தாலும் அதனைப் படிமுறை ரீதியாகவே செய்ய வேண்டும். அதேபோல் சுகாதார நடைமுறைகள் தொடர்ந்தும் பின்பற்றப் பட வேண்டும். அனைத்துத் தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் – என்றார்.

## வைத்தியர் வீட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போன்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற நிலையில் அரியாலையைச் சேர்ந்த 24 வயதுடைய சந்தேக நபர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஓய்வுபெற்ற மருத்துவ தம்பதியர் வீட்டில் வசித்து வரும் நிலையில் அவர்கள் இரவுச் சாப்பாட்டை எடுத்துக்கொண்ட போதும் வீட்டின் முன் கதவைத் திறந்து ஐபாட், 2 ஐபோன்கள் மற்றும் சவுண்ட் சிஸ்ரம் என்பன திருடப்பட்டன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டமையுடன், அவரிடமிருந்து ஐபாட் மற்றும் இரண்டு ஐ போன்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

---

## மேலும் 51 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 51 பேரில் 29 ஆண்களும், 22 பெண்களும் அடங்குகின்றனர்.

இதில் 5 ஆண்கள், 5 பெண் கள் என 10 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 41 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 24 ஆண்களும், 17 பெண்களும் அடங்குகின்றனர்.

---

## அரசிக்கான கட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நோக்கில் ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுளளது.

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சோ.சுகிர்தன் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோருடன் இணைந்து நேற்று அப்பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார் சுமந்திரன் எம்.பி.

கடந்த அரசால் விடுவிக்கப்பட்ட காணிகளை இராணுவத்தினர் மீள கையகப்படுத்தும் நோக்குடன், அக்காணிகளில் இது இராணுவத்தினருக்குச் சொந்தமான காணி என்று எழுதிய பலகைகளை நாட்டியுள்ளனர்.

அதனால் அப்பகுதி மக்களிடம் குழப்பம் நிலவி வந்தது. அத்துடன் இராணுவத்தினர் பலகை நாட்டிய காணி உரிமையாளர்கள், வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் வலி.வடக்கு பிரதேச செயலர் ஆகியோரிடமும் முறையிட்டு இருந்தனர்.

இந்நிலையிலையே சுமந்திரன் எம்.பி. நேற்று அப்பகுதிகளுக்கு நேரில் சென்று ஆராய்ந்துள்ளார்.

---

## ஒக்.முதலாம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் முதலாம் திகதி அதிகாலை 4 மணியுடன் தளர்த்தப் படவுள்ளது எனவும், அதனை மேலும் நீடிக்காமல் இருக்க அரசு அவதானம் செலுத்தியுள்ளது எனவும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று தெரிவித்தார்.

அத்துடன், நாடு மீளத் திறக்கப்பட்டாலும் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களை மக்கள் முறையாகப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
—
1934
—
04
—
01



மறைவு
—
2021
—
09
—
25

## M.P. வேதநாயகம்

(ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் NSB, முன்னாள் உபதலைவர், பொருளாளர் OBA, St Patrick's College, Jaffna முன்னாள் உபதலைவர் Bank Pensioners Association)

யாழ். பிரதான வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மரியான் பேதுருப்பிள்ளை வேதநாயகம் 25.09.2021 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை, மரியப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான Dr.சேலிஸ், லேனாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் ஹெலன் வேதநாயகம் (ஓய்வுபெற்ற உப அதிபர் சென். அன்ரனீஸ் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் Pamela Brian (Canada), Shereen Esperior (Switzerland), Anpalagan (Chemistry Anpu) (Senior Lecturer, CLC Former Researcher, Lund University Sweden, Former Research Assistant, Faculty of Medicine, University of Jaffna, யாழினி நெவின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிறையன் கிறிஸ்ரியன் (Engineer, Canada) லியோ எஸ்பீரியர் (Switzerland), Dr.Jasinththa Anpalagan (Specialist Doctor, Rhumatology Queen Elizabeth Hospital, UK), அன்றூ நெவின் (Radiographer, Teaching Hospital Jaffna), ஆகியோரின் மாமனாரும், தங்கராணி (Switzerland), பிரான்சிஸ் (இளைப்பாறிய வங்கி முகாமையாளர் இலங்கை வங்கி) சௌந்தரி (இந்தியா), குலம், ரதி, நந்தினி ஆகியோரின் சகோதரனும் ஓய்வுபெற்ற காலஞ்சென்ற அருட்சகோதரி Lily Osa (A.C) காலஞ்சென்ற றெஜினா எசேக்கியேல் (ஆசிரியர்) அமரர் தேவதாசன் (ஓய்வுபெற்ற அதிபர் திருகோணமலை) Dr.Aloysius மற்றும் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் காலஞ்சென்ற யோசப் (Former Head Master St Peter's College, Bambalapitiya), Emmanuel (Transport Officer Cooperative) ஆகியோரின் மைத்துனரும் Orian (Canada), Laxten (Canada), Jerry (Switzerland), Jessica (Switzerland), Shanjana (UK), அரவிந், ஆர்த்திக், இதழ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார் அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை புதன்கிழமை (29.09.2021) காலை 9 மணியளவில் நடைபெறும்.

368/3 பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
021 4590834

தகவல் குடும்பத்தினர்.
Pamela +16477236072
Anpalagan +440728625443
Helen 94716427717
Shereen 0041446803831


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலுமு, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


வாசிக்கத் தவறாதீர்கள்
இனி உவையள் வரமாட்டினம்
கொக்கிற்கு நரி கொடுக்கும் விருந்து
நாய்களை நம்ப வைத்து களவுகள்
என்னாச்சு விஜய்சேதுபதிக்கு
62 ஆவது இதழ்
செம்மணி
றெஜினாவுக்கு மவுசு
வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொழும்புக்குப் பரீட்சைக் காலம்

இலங்கையின் நிலைவரம் தொடர்பாக – குறிப்பாக மனித உரிமைகள் நிலைமை சம்பந்தமாக – நேரில் ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐந்து பிரதிநிதிகள் கொண்ட கண்காணிப்புக் குழு நேற்று கொழும்பு வந்து சேர்ந்தது. எதிர்வரும் 5ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து பல் வேறு தரப்பினரையும் அந்தக் குழு சந்தித்து, இலங்கை பற்றிய தனது மதிப்பீட்டைச் செய்து கொள்ளும்.

ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், ஐ.நா. முகவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பல தரப்பட்டவர்களையும் இக்குழு சந்திக்கவிருக்கின்றது.

ஆடை உற்பத்திகள் உட்பட இலங்கையின் ஏற்றுமதிக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ள ஜி.எஸ்.பி. வரிச்சலுகையைத் தொடர்ந்து நீடிப்பதா என்பது தொடர்பில் இங்குள்ள நிலைமைகளைக் கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்கவே இந்தக்குழு இலங்கை வந்திருக்கின்றது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்பாடடையச் செய்வோம், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பட்டயங்களில் கூறப்பட்டுள்ள நியமங்களைக் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்துவோம் என்பன போன்ற உறுதிமொழிகளை வழங்கியே – அதன் அடிப்படையிலேயே – இந்தச் சலுகையை இலங்கை பெற்றிருந்தது.

2010 இல் முன்னைய ராஜபக்ஷக்களின் அரசில் மோசமான மனித உரிமை மீறல் நிலைமை நீடித்தமையால் இந்தப் பெருவாய்ப்பை அப்போது இலங்கை இழந்தது. எனினும் 2015இல் அதிகாரத்துக்கு வந்த நல்லாட்சி அரசு, ஐரோப்பிய ஒன்றியத்தின் கால்களில் விழுந்து மன்றாடி, பல உறுதி மொழிகளை வழங்கி, 2017 இல் இந்தச் சலுகையை மீளப் பெற்றுக்கொண்டது. ஆனால் மனித உரிமைகள் நிலைவரத்தை சர்வதேச நியமங்களுக்கு அமைவாகப் பேணுவது தொடர்பில் தான் அளித்த வாக்குறுதிகளை கொழும்பு நிறைவேற்றவேயில்லை என்ற ஆதங்கத்தில் இலங்கைக்கான இந்தச் சலுகையை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானம் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் கடந்த ஜூனில் நிறைவேற்றப்பட்டது.

அது குறித்து முடிவு செய்வதற்கு முன்னர் நிலைமையை நேரில் அவதானித்து, உண்மைகளைக் கண்டறிந்து, பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காகத் தனது கண்காணிப்புக் குழுவை ஐரோப்பிய ஒன்றியம் தற்போது அனுப்பியுள்ளது.

அடுத்த வருட முதல் காலாண்டில் ஸ்ரீலங்கா – ஐரோப்பிய ஒன்றிய கூட்டு ஆணைக்குழுவின் 24ஆவது கூட்டத்தொடர் நடக்கவிருக்கின்றது. அதைத் தொடர்ந்து கூடும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் கூட்டத்தில் இலங்கைக்கு வரிச்சலுகையைத் தொடர்வதா என்பது குறித்து முடிவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் காட்டுமிராண்டித்தனமான சட்ட ஏற்பாடுகளை நீக்குதல், நாட்டில் மனித உரிமைகளை சர்வதேச நியமனங்களுக்கு அமைவாகப் பேணுதல், தொழிலாளர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளை மதித்து நிலைநிறுத்துதல் போன்றவை தொடர்பில் சர்வதேச சமூகத்துக்குத் தான் அளித்துள்ள வாக்குறுதிகளை கொழும்பு அரசு நிறைவேற்றவில்லை. யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றவை தொடர்பான விடயத்தை ஒட்டி பொறுப்புக் கூறல் பொறிமுறை முன்னெடுக்கப்படவில்லை. நல்லிணக்கம், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல், இழப்பீடு வழங்கல் போன்ற எந்த விடயத்திலும் முன்னேற்றமில்லை. இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக்குழு இந்த வருகையை ஒட்டி வைக்கப் போகின்ற பரீட்சையில் கொழும்பு சித்தியடைவது பெரும்பாலும் துர்லபமே.

# நாட்டை மீண்டும் மீளத் திறப்பதற்காக சுகாதாரப் பரிந்துரைகளை முன்வைக்குக!

## ஜனாதிபதி பணிப்பு



தனிமைப்படுத்தல் ஊரடங்கை ஒக்ரோபர் முதலாம் திகதி தளர்த்துவதற்குத் தேவையான உரிய சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய பரிந்துரைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போதைய தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு ஒக்ரோபர் முதலாம் திகதி அதிகாலை 4 மணிக்கு முடிவடையவுள்ள நிலையில் சுகாதார, போக்குவரத்து மற்றும் ஏனைய பிரிவுகளால் இந்தப் பரிந்துரைகள் வழங்கப்படவுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் ஊரடங்குச் சட்டத்தை மேலும் நீடிக்காமல் இருக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

மேலும் தற்போது நடைபெறும் சிறுவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் பணியில் இதுவரை எந்தச் சிக்கலும் பதிவாகவில்லை என ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் ஊரடங்கு உத்தரவை நீக்குவதன் மூலம் நாட்டை மீண்டும் திறக்க சுகாதாரப் பரிந்துரைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான விரிவான திட்டத்தை வகுக்க கொரோனா தடுப்பு செயலணி முடிவு செய்துள்ளது.

# 25 ஆண்டுகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டோருக்கு முதலில் காணி வழங்க மன்னாரில் நடவடிக்கைகள்

மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை சோழ மண்டலக் குளம் பகுதியில் கடந்த 25 ஆண்டுகளாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு முதலில் காணியை வழங்கிய பின்னரே ஏனைய விடயத்தை முன்னெடுக்க வேண்டும் என மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் உரிய அதிகாரிகளுக்கு நேற்று (திங்கட்கிழமை) பணிப்புரை விடுத்தார்.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை சோழ மண்டலக் குளம் பகுதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணி 250 ஏக்கர் காணப்படுகின்றது.

இந்தக் காணியில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இலுப்பைக்கடவை அந்தோனியார்புரம் பகுதியில் உள்ள 95 பேர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் அவர்களுக்கு குறித்த காணி உரிய முறையில் வழங்கப்படாமை தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் அண்மையில் காணி அமைச்சரிடம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரி அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

இந்த நிலையில் குறித்த கோரிக்கைக்கு அமைவாக நேற்று (திங்கட்கிழமை) காலை மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தலைமையில் வட மாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நிமலன், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கே.அரவிந்தராஜ் மற்றும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் உட்பட உரிய அதிகாரிகள் இலுப்பைக்கடவை சோழ மண்டலக்குளம் பகுதியில் உள்ள மேற்படி பகுதிக்குச் சென்று பார்வையிட்டதோடு விசாரனைகளை மேற்கொண்டனர்.

இதன் போது அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆவணத்தை பெற்றுக் கொண்டவர்கள் , தனி நபர்கள் மற்றும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் குறித்த பகுதியில் காணி துப்புரவு செய்திருந்த நிலையில் அவர்களின் துப்புரவு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும் கடந்த 25 ஆண்டுகளாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு முதலில் காணியை வழங்கிய பின்னரே ஏனைய விடயத்தை முன்னெடுக்க வேண்டும் என மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை முன்வைத்தார்.

# நுவரெலியா வைத்தியசாலையில் சுகாதாரப் பணியாளர் போராட்டம்



நுவரெலியா பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதாரப் பணியாளர்கள் தமது உரிமைகளைக் கோரி நேற்று (திங்கட்கிழமை) அடையாள பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையினர் முன்னெடுத்தனர்.

ஒன்றிணைந்த சுகாதார ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பணி பகிஷ்கரிப்பில் 300 இற்கும் அதிகமான சுகாதாரப் பணியாளர்கள் தங்களது கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது சுகாதாரப் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும், மேலதிக சேவை நேரத்துக்கான கொடுப்பனவை வழங்க வேண்டும், கொரோனா காலத்தில் ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவு மற்றும் கொரோனா பாதுகாப்பு உடை உள்ளிட்ட சலுகைகளைத் தமக்கும் வழங்க வேண்டும் என மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தனர்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 89

ந.வித்தியாதரன்

'சுதந்திரன்', 'தினபதி', 'சிந்தாமணி', 'சூடாமணி', 'மாணிக்கம்', 'உதயம்' என்று பல வெளியீடுகளை புதிதாக உருவாக்கியவர் எஸ்.டி.சிவநாயகம் ஐயா.

நாம் 'உதயன்' பத்திரிகையை ஆரம்பிப்பது பற்றி அவரோடு பேசிய சமயத்தில் மிகுந்த ஈடுபாட்டுடனும் வாஞ்சையுடனும் அது தொடர்பான ஏற்பாடுகளில் தானாக முன்வந்து தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, பிரதியுபகாரமாக எதுவுமே எதிர்பார்க்காமல் ஆலோசனைகள் தந்து, எங்களை வழிப்படுத்தினார் அவர். அது, அவருடைய பண்ணையில் வளர்ந்த நான், கானமயிலநாதன், பத்மசீலன், பேரின்பநாயகம், குருநாதன் போன்றோர் சம்பந்தப்பட்ட புதிய பத்திரிகை என்பதனால் அவர் அதில் அதிகம் ஈடுபாடு காட்டுகின்றார் என நான் நினைத்தேன்.

ஆனால், பத்திரிகை உலகில் 'ஆயிரம் மலர்கள் மலரட்டுமே' என்று அவரது பரந்த எண்ணத்தின் வெளிப்பாடுதான் அது என்பதை இப்போது உணர்கிறேன்.

ஈழத்துப் பத்திரிகை உலகின் இன்னொரு ஜாம்பவான் இ.கே.ராஜகோபால். இப்போதும்-தமது 72 வயதிலும் இளைஞர் போன்ற துடிப்புடன் லண்டன் புதினம் இதழை வெளியிட்டு வருபவர். ஈழநாட்டில்


பத்திரிகையாளர் ராஜகோபாலும் மனைவியும். (இளமைக்காலம்)

தன்னுடைய பத்திரிகைப் பணியை ஆரம்பித்த ராஜகோபால் அத்துறையில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் சாதனை படைத்தவர்.

90களின் இறுதியிலும் 91 ஆரம்பத்திலும் அவர் லண்டனில் இருந்தபடி தமிழன் என்றொரு மாத சஞ்சிகையை ஆரம்பிக்க முற்பட்டார். அச்சமயத்தில் அவருக்கும் தானாக வலிந்து உதவினார் எஸ்.டி.சிவநாயகம் ஐயா. கொழும்பில் இருந்தபடி ராஜகோபாலுக்கு அவர் அனுப்பிய கடிதங்களின் சில பிரதிகளை என் இன்னொரு ஊடக நண்பரும், உதயனின் ஆரம்பகால ஆசிரியர் பீட வித்துக்களில் ஒருவருமான ஜெகதீசன் எனக்கு அனுப்பி வைத்திருந்தார். அவற்றைப் பார்த்துப் படித்து நான் பிரமித்துப் போனேன். லண் டனில் பிரசுரமாகும் ஒரு பத்திரிகைக்கு அதன் செழுமைக்கும், தோன்றாத்துணையாய் பின்புலத்திலிருந்து வழி காட்டிய சிவநாயகம் ஐயாவினுடைய உயரிய பண்பியல்பு என்னை மெய் சிலிர்க்க வைத்தது

இந்தப் புதிய பத்திரிகை வெளியிட்டையொட்டி சிவநாயகம் ஐயா மேலும் பல நீண்ட பல விளக்கங்கள் கொண்ட வழிகாட்டல் கடிதங்களை ராஜகோபாலுக்கு எழுதியிருக்கிறார் என்பது இந்த 14 பக்கங்களில் இருந்து என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது.

நீண்ட கடிதங்கள் என்பதால் அவற்றை முழுமையாகப் பிரசுரிக்க முடியாவிட்டாலும் ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் ஆங்காங்கே சில வாசகங்களை சிவநாயகம் ஐயாவின் வசனங்களிலேயே - எந்த மாற்றங்களுமின்றி அப்படியே தர விரும்புகிறேன்.

இனி, ராஜகோபாலுக்கு சிவநாயகம் ஐயா 90 இறுதியிலும் 91 ஆரம்பத்திலும் எழுதிய கடிதங்களின் வாசகங்களைத் துண்டுதுண்டாக நீங்கள் பார்க்கலாம்.

தமிழ் பத்திரிகை உலகில் கம்பியூட்டர்களின் செல்வாக்கு வருவதற்கு முந்திய காலம் இது என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

***

"லண்டனிலிருந்து ஒரு தமிழ் இதழை வெளியிட வேண்டுமென்ற உங்களுடைய உயரிய இலட்சியத்தை மனமாரப் பாராட்டுகிறேன். முன்பு 'லண்டன் முரசு' வந்தது. அதற்கு என்னாலான உதவிகளை எல்லாம் ஆரம்பத்தில் செய்து கொடுத்தேன். முன்பக்க அட்டை கூட என்னுடைய மனு தர்மத்தின் படி இங்கிருந்து வரைந்து அனுப்பப்பட்டதுதான். தினபதி ஆர்ட்டிஸ்ட் 'ஹீனா'தான் அதை வரைந்து கொடுத்தார்.

"நீங்கள் வெளியிட்ட தமிழன் முதல் பிரதியைப் பார்க்க விரும்புகிறேன். தயவு கூர்ந்து அனுப்பி வையுங்கள். அதைப் பார்த்தால் உத்தேச பத்திரிகை சம்பந்தமாக உங்கள் மன ஓட்டத்தை நான் ஓரளவு புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். நீங்கள் கருதும் ஜூனியர் போஸ்ட் 'போமட்' நன்றாகவே இருக்கும் என்று தோன்றுகின்றது. அதன்படியே வைத்துக்கொள்ளலாம்."

"நீங்கள் கேட்டுக்கொண்டபடி உற்சாகமும், உழைப்பும், அனுபவமும் உள்ள ஒரு நபரை நியமித்துத் தர முயல்கிறேன். அப்படி உடனடியாக முடியாவிட்டாலும் ஆரம்ப இதழ்கள் சிலவற்றிற்கு வேண்டிய 'மட்டர்களையும்' படங்களையும் நானே திரட்டித் தருகிறேன்.

"எஸ்.டி.எஸ். என்ற பெயர் போட்டு மாதாமாதம் ஒரு தனி விடயத்தை எழுதித் தருகிறேன். அதுமட்டுமல்ல, உங்களுக்கு வரைபடங்கள், ஆர்ட் செய்யப்பட்ட


பத்திரிகையாளர் மாலி

தலைப்புக்கள் மற்றும் இலஸ்ட்ரேன்கள் வேண்டி இருந்தால் அவற்றையும் இங்கு உள்ள கைபடிந்த ஆர்ட்டிஸ்டுகளைக் கொண்டு தயாரித்து அனுப்பி வைக்கலாம். இது உங்கள் தேவையையும் விருப்பத்


பத்திரிகையாளர் ஜெகதீசன்

தையும் பொறுத்தது. நிபந்தனையும் இல்லை; கட்டாயமும் இல்லை.

"இங்கு புலிகளுக்கு ஆதரவாளர்கள் கூடுதல். ஆனால் நடுநிலையாகத் தான் விடயங்கள் வரவேண்டும்" என்று உங்கள் கடிதத்தில் உங்கள் பத்திரிகைக் கொள்கையை கூறியிருந்தீர்கள். உங்கள் கருத்து எனக்கும் உடன்பாடே. அதே வேளையில் புலிகளின் நல்ல செயல்களை நாம் போற்றி விமர்சிப்பது உங்கள் பத்திரிகை வளர்ச்சிக்கும் நிச்சயம் உதவும் என்று கருதுகிறேன்.

"எப்படியான செய்திகளை எழுதலாம் என்பதற்காக சில மாதிரிகளையும் குறிப்பிட்டிருந்தீர்கள். அவற்றை நான் கிரகித்துக் கொண்டேன். பத்திரிகை மொத்தம் எத்தனை பக்கம், இதில் விளம்பரம் எத்தனை பக்கம், மட்டர் எத்தனை பக்கம் என்ற விவரத்தைத் தர முடியுமா?

"புதுமையான அம்சங்கள் சிலவற்றைப் புகுத்தலாம் என்றும் என் மனதில் எண்ணங்கள் அலை பாய்கின்றன. உங்கள் பதில் கண்டு சில தலைப்புகளை அடுத்த கடிதத்தில் தருகிறேன். பத்திரிகை வளர்ச்சியுறும்போது மாதம் இரண்டு இதழ்களாக வெளியிடலாம்."

***

"பத்திரிகையை எப்படியும் நடத்துவதென நீங்கள் திடமாகத் தீர்மானித்து விட்டமை பற்றி மகிழ்ச்சி. இனித் தளர்வு கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன். பத்திரிகையின் பெயரை 'தமிழன்' என்று நீங்கள் எல்லோரும் கூடித் தீர்மானித்து விட்ட விவரம் எழுதியிருந்தீர்கள் அப்படியே வைத்துக் கொள்ளலாம். எனக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. மனப்பூர்வமாக வரவேற்கிறேன். "பத்திரிகை அனுபவமும் எழுத்தாற்றலும் உள்ள தம்பி 'மாலி' உங்களுடன் சேர்ந்து இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. பத்திரிகை என்பது தனி மனிதன் முயற்சிக்கு உட்பட்டதல்ல, அது ஒரு கூட்டு முயற்சியாக அமையும் போதுதான் நன்கு பரிணமிக்க முடியும்.

"தமிழ்நாடு நிருபராக யாரை வைக்கலாம் என்று கேட்டிருந்தீர்கள். இலங்கை அரசியலிலும் பரிச்சயமான இருவர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். ஒருவர் முன்பு இலங்கை Mirror பத்திரிகையில் செய்தி ஆசிரியராக இருந்த திரு கிருஷ்ணசாமி. அவர் இப்போது மதுரை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் Chief Reporter ஆகக் கடமையாற்றுகிறார். தமிழிலும் நன்கு எழுதக்கூடியவர். இலங்கை வானொலியிலும் ஒருகாலத்தில் தமிழில் அரசியல் வார விமர்சனம் நிகழ்த்தியவர். அவர் விமர்சனம் மிக நன்றாக இருந்ததுண்டு. மற்றவர், முன்பு வீரகேசரியில் என்னால் வளர்க்கப்பட்டவர். பெயர் கார்மேகம். அவர் இப்போது சென்னையில் தினமணியின் தின இதழில் செல்வாக்குடைய ஒரு உதவி ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இலங்கை வர்த்தமானங்களும் அரசியலும் கட்டமைப்பும் அறிந்தவர். நான் சொன்னால் அவர்கள் தமிழன் பணியை ஏற்று நன்கு செய்வார்கள். நீங்கள் விரும்பினால் அவருடைய முகவரிகளை அடுத்த கடிதத்தில் தருகிறேன். ராணி மைந்தன் திறமைசாலிதான். ஆனால் அவர்கள் எல்லோரும் இந்திய நிகழ்வுகளை இலங்கைக் கண்ணோட்டத்தில் பார்த்து எழுதக் கூடியவர்களாக இருப்பார்கள் என்பது சந்தேகம்தான்.

"தமிழன் இதழை செப்டெம்பர் முதலாம் திகதி வெளியிடுவதாக முடிவு செய்திருப்பது நல்லது. முதலாம் திகதி சூரியனுக்கு உரியது. சூரியன் அறிவின் பிரகாசம். கல்வி, பத்திரிகை,பொதுஜன தொடர்பு போன்றவற்றுக்கு ஏற்ற நாள். 1-9-1991இல் மூன்று ஒன்றுகளும் மூன்று ஒன்பதுகளும் இடம் பெறுகின்றன. 9 வர்த்தக வெற்றிக்கு ஏற்ற இலக்கம். மூன்று ஒன்பதுகளும் வருகின்றன. 9x3=27. இதுவும் ஒன்பதாகிறது. அதைவிட வெளியீட்டுத் திகதியின் கூட்டுத் தொகை இரண்டு சந்திரனுக்குரிய எண். சூரியனும் சந்திரனும் இணைய பத்திரிகை தோன்றுகின்றது.

"செப்டெம்பர் 91, முதலாம் ஞாயிற்றுக் கிழமை அமைந்துவிட்டது மகா பொருத்தம். அதுமட்டுமல்ல. அன்று சப்தமி திதியும் கார்த்திகை நட்சத்திரமும் வருகின்றன. ஆனால் ஒன்று, இங்கிலாந்து நேரப்படி ஞாயிறு அதிகாலை 5.18 மணிக்கு முன்னர் பத்திரிகையை வெளியிட்டு முதல் பிரதியையும் விற்பனை செய்து விட வேண்டும். காலை 5:18 மணி வரைதான்



சப்தமி திதி நிற்கின்றது. அதன் பின்னர் அஷ்டமி வந்துவிடும். என்றாலும் இந்த அஷ்டமி பாதகமில்லை . ஏனென்றால் அது ஜன்மாஷ்டமி. கோகுல அஷ்டமி என்றும் சொல்லப்படும். அன்றுதான் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியும் ஆகும். அந்த வகையில் இந்த அஷ்டமி கிருஷ்ண பகவான் அவதரித்த அஷ்டமி. விசேஷமானதாகும். ஞாயிறு 20:28 வரை, லண்டன் நேரப்படி கார்த்திகை நட்சத்திரம் நிற்கிறது அதன்பின்னர் ரோகிணி நட்சத்திரம். கிருஷ்ணன் அவதரித்த நட்சத்திரம் ரோகிணிதான். முதல் இதழில் கிருஷ்ணரைப் பற்றி, கிருஷ்ண ஜெயந்தி பற்றி ஒரு சிறு குறிப்பு அவசியம். வெளியிடுங்கள். அது மட்டுமல்ல, பகவத்கீதை பற்றியும் ஏதாவது எழுதுவது நல்லது. (ஒரு சிறு குறிப்பு: என்னுடைய ஜென்ம நட்சத்திரமும் ரோகிணிதான் என்பதை இந்த இடத்தில் மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.) ஒன்று மட்டும் தவறாது செய்து விடுங்கள். முதலாம் திகதி ஞாயிறு அதிகாலை 5 மணிக்கு முகூர்த்தம் வைத்து பத்திரிகையை வெளியிட்டு விடுங்கள்.

(07ஆம் பக்கம் பார்க்க)



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

அங்கம் - 144



அமிர்தலிங்கம்,மங்கையர்கரசி அமிர்தலிங்கம், தந்தை செல்வா ஆகியோருடன் கோவை மகேசன் (இடது கரையில் நிற்பவர்)

**381. அப்படியான அறிக்கைகளால் தமிழ் மக்களுக்கும், தமிழீழம் என்பது சாத்தியமில்லை எனச் சொல்லாமல் சொன்னாரா அமிர்தலிங்கம்?**

வட்டுக்கோட்டைதீர்மானம், தாங்கள் ஒரு மமதை கொண்ட பேரினவாத மக்களிடமிருந்து, தங்களது அனுப வங்களினால், விடுதலை பெற ஏற்றுக் கொண்ட வெளிப்படுத்தலா அல்லது மக்களின் உணர்ச்சியைக் கிளறி, அத னால் நாடாளுமன்றத்துக்குப் போவ



அமிர்தலிங்கம்

தற்கு அமைக்கப்பட்ட பாதையா என் பதை தாங்கள் சுமந்த வலிகளிலிருந்து மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டி யது.

இவற்றினால் கூட்டணியிலேயே கருத்து வேற்றுமைகள் தொடங்கி,



எம்.சிவசிதம்பரம்

முன்னாள் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், ஈழவேந்தன், டாக்டர் தர்ம லிங்கம் போன்றோர் இன்னுமொரு குழுவாக தமிழீழ விடுதலை முன்னணி (Tamil Eelam Liberation Front) என இயங் கினார்கள்.

இவற்றினால், தமிழர் விடுதலைக் கூட்டணி, தங்களுக்கும் வன்முறைக ளுக்கும் எதுவிதத் தொடர்புகளும் கிடை யாதென்றும், தாங்கள் அவற்றை ஊக்கு விக்கவில்லை என்றும், சட்டபூர்வமான வழிகளில் தாம் தொடர்ந்தும் தமிழீழம் அமைக்கப் போராடுவார்கள் எனவும் தெரிவித்தார்கள்.

அதை ஒட்டிய முதலாவது உலக தமிழரின் தமிழீழ மகாநாட்டில் அவர்கள் பங்குபற்றினார்கள். அது ஜூலை 1982 இல் அமெரிக்க நியூயோர்க் நகரில் நடந் தது. இதனை முன்னெடுத்து நடத்துவ தற்கு உழைத்தவர்கள். டாக்டர் டபிள்யூ. வி.பஞ்சாட்சரம், எட்வார்ட் பெனடிக்ட், கே.ஜெகதீசன், ரி.சிறீதரன், என்.விஜயநாதன் என்பவர்கள். முதுகெலும்பாய் இருந்தவர் டாக்டர் பஞ்சாட்சரம்.

இந்த மகாநாட்டிற்கு முக்கியமாகத் தமிழ்நாட்டிலிருந்து டி.பி. ராதாகிருஷ் ணன் (தி.மு.க.), பழ.நெடுமாறன் (காம ராஜ் காங்கிரஸ்), இரா.ஜனார்த்தனம் (அண்ணா தி.மு.க.), தங்கபாலு (இந்திரா இளைஞர் கங்கிரஸ்), அருகோபாலன் (தமிழீழ ஒற்றுமைக்குழு), பெரும் கவிக்கோ, டாக்டர் வி.எம்.சேதுராமன் (சர்வதேச தமிழர் ஒருங்கிணைப்பு அமைப்பு), கே.சிட்டிபாபு (தமிழர் பாதுகாப்பு முன்னணி) எம்.ஜெயலானி போன்றோ ரும் -

ஸ்ரீலங்காவிலிருந்து தமிழர் விடுத லைக் கூட்டணிக்காக அமிர்தலிங்கமும், சிவசிதம்பரமும், தமிழீழ விடுதலைக் கூட்டணிக்காக கோவை மகேசன் (சுதந் திரன் பத்திரிகை ஆசிரியர்), ஈழவேந் தன், எஸ்.ஸி.சந்திரகாசன் (தமிழர் விடு தலைக் கூட்டணியின் சட்டத்துறை காரியதரிசி) ஆகியோரும் -

அவர்களை விட மேலும் 200 இற்கு மேற்பட்டவர்களும் பங்குபற்றினார்கள்.

அந்த மகாநாட்டின் முக்கிய நோக்கம் "தனித் தமிழ் நாடு ஒன்றுதான் தமிழ் மக்களின் சுதந்திரத்தையும், விடுதலை யையும் வெளிப்படுத்தும். அது மிக வீரியத்துடன் முன்னெ டுக்கப்பட வேண்டும்" என்பது தான்.


அதற்கு உறுதுணையாக அவர்களின் சுயநிர்ணய உரிமை மேலும் காலம் தாழ்த் தப்படாது, அதிகாரம் கொண்ட வர்களின் முன் உடனடியாக சமர்ப்பிக்க வேண்டிய நடவ டிக்கைகளை மேற்கொள்ள வும் வழிகளை ஆராய விரும் பினார்கள்.

மகாநாடு தொடங்கும் முன் னரே தமிழர் ஒருங்கிணைப் புக் குழுவின் அனுபவத்தில் தமிழர் விடு



ஈழவேந்தன்

தலைக் கூட்டணியினர்(TULF) அங்கு தமிழீழ விடுதலைக் கூட்டணியினர்(TELF)



பழ.நெடுமாறன்

அழைக்கப்பட்டிருப்பதாலும், அவர்க ளுக்கு சார்பானவர்கள் பங்குபற்றுவதா லும், தங்களுக்கு எதிராகக் குற்றம் சொல் லும் ஒரு மேடையாக அது பாவிக்கப் படக்கூடாது எனவும், அப்படி பாவிக்கப்பட் டால் அதிலிருந்து தாங்கள் வெளியேறி



சந்திரகாசன்

விடுவோம் என நிபந்தனை வைத்தனர். நீண்ட இரவின் பேச்சுவார்த்தைகளில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கூட்டணியினர் தாங்கள் தான் சுய நிர்ணய அடிப்படையில் தமிழீழம், அமைப் பதென்ற ஆணையை மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளனர் எனவும் தங்களது ஆதரவு அன்றில் அனுசரணை பெறாமல் நாட்டிலேயோ, புலம்பெயரிலோ அதைநிறுவ முற்பட மக்களின் அதிகாரம் இல்லை என்பதையும் வற்புறுத்தினார் கள்.

மூன்று நாள்களும் பலவகையான வழிகள் பேசப்பட்டு, ஆராயப்பட்டு, தமிழீழ அமைப்பின் ஆயத்துக்கான தீர்மானங் கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

(வளரும்.......)

# தமிழ் ஊடகத்துறையின் ...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

“கேள்வி – பதில் பகுதி ஒன்றை ஆரம்பிக்க விரும்புகிறீர்கள். அப்படியே செய்யலாம். ‘தட்டுங்கள் திறக்கப்படும்’ – குயுக்தியார் என்று போடலாம். அல்லது ‘கேட்டால் கிடைக்கும்’ – விடையவன் என்று போடலாம். நான் பதில்கள் எழுதித் தருகிறேன். கேள்விகளைத் தயாரித்து உடன் அனுப்பி வையுங்கள். வேடிக்கையாகவும், குத்தலாகவும், விகடமாகவும், நகைச்சுவையாகவும், எழுதி அனுப்பி வைக்கிறேன். பதில்களில் நிறைய WIT இருக்க வேண்டும். முடிந்தவரை சிறப்பாகச் செய்து தருகிறேன். பதில்களில் மெல் லிய இழையாக செக்ஸ் இருக்கும். இருக்கத்தான் வேண்டும்.

“வேண்டிய ஆர்ட் வேர்க்குகளை நானே செய்வித்து அனுப்பி வைக்கிறேன். அதற்கான சலாரை நீங்கள் கொடுக்க வேண்டும். இப்போது ஆர்ட்டிஸ்டுகள் மிக அதிகமாகக் கட்டணம் வாங்குகிறார்கள். ஆட் வேர்க் தலைப்புகளும், படங்களும், இலஸ்ரேஷன்களும், கார்ட்டூன்களும் நிறைய இருந்தால்தான் பத்திரிகை எடுபடும். ஜோக்குகளும் படங்களும் அவசியம். வெறும் அரசியல் எழுதி மட்டும் ‘சேர்க்குலேஷன்’ பிடிக்க முடியாது. எப்படியாவது நிரந்தரமாகப் பெண் வாசகர்களைப் பிடிக்கப் பார்க்க வேண்டும். அதற்கேற்றபடி வலை விரிப்பதில்தான் பத்திரிகையின் விற்பனையும் செல்வாக்கும் தங்கி இருக்கும். தினப் பத்திரிகைகளை எல்லோரும் வாசிப்பார்கள். வார, மாதப் பத்திரிகைகளுக்கு பெண் வாசகர்கள் மிக மிக முக்கியம்.

“நான் எழுதும் விடயங்களுக்கு பக்க அமைப்பு, ‘டம்மி’ வரைந்து அனுப்பி வைப்பேன். அதில் சிரமம் ஒன்றும் இல்லை. நான் இப்போது அனுப்பும் ஆர்ட்வேர்க்குகளில் வேண்டியவற்றை – குறிப்பாக முன்பக்க கீழ்பட்டியை நீங்கள் ரிவர்ஸ் ஆக்கிக் கறுப்பு பட்டியில் வெள்ளை எழுத்துக்களாக வரும்படி அமைத்துக் கொள்ளலாம்.

“பரிஸ் ஈழநாடு பார்த்தேன். அமைப்பு நன்றாக இருக்கிறது. விடயங்கள் காத்திரமாக இல்லை. ஒருவேளை வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு செய்திகள் புதிதாக இருக்கலாம். எனக்கு அப்படி இருக்கவில்லை. செய்திகளை எழுதுவதைவிட கமெண்ட், ஒபினியன், றீஅக்ஷன் போன்றவற்றையும் சேர்த்து எழுதினால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ தெரியவில்லை

“தமிழன்’ Master Head அனுப்புகிறேன். இந்த ஸ்டைல் நன்றாக இருக்கும் போல தோன்றுகின்றது. ஆங்கில எழுத்துக்கள் பிடித்தமாக இல்லை என்றால் கையால் ஆங்கில எழுத்துக்களை வரையாமல் போட்டோ செட் பண்ணி ஏற்ற அளவில் ஒட்டிக் கொள்ளுங்கள். அழகாக இருக்கும்.

சவாரித் தம்பர் சிருஷ்டிகர்த்தா சிவஞானசுந்தரத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதை மிகமிக வரவேற்கிறேன். அவர் என் மதிப்புக்குரியவர்.

“நீங்கள் ‘நியூமரோலஜி’ பலன் இங்கிருந்து எழுதலாமா என்று கேட்டிருக்கிறீர்கள். பேஷாக எழுதலாம். ‘ஆர்வி’ என்று ஒரு ஜோதிடர் சிந்தாமணியில் எழுதிவந்தார். இரண்டிலும் வல்லவர். அவரையே எழுதும்படி என்னால் பணிக்க முடியும். யாரும் எழுதாத புதிய முறையில் அவர் நியூமரோலஜி எழுதுவார். கீரோ முறை, பண்டிதர் சேதுராமன் முறை எல்லாவற்றையும் விட அவரிடம் சிறந்த முறை ஒன்று இருக்கிறது. நிச்சயமாக அவர் எழுதுவது மேல் நாட்டில் உள்ள வாசகர்களுக்கு ரொம்பவும் பிடிக்கும். துணிந்து கூறுவேன்.

“வீரகேசரி தினப் பத்திரிகை. அது இலங்கைச் செய்திகளைச் சுடச் சுடக் கொண்டு வரும். அத்தோடு செய்தி வெளியிடுவதில் ஒரு மாதப் பத்திரிகையோ,வாரப் பத்திரிகையோ போட்டி போட்டு விற்பனை செய்ய முடியாது.

“ஆகையால் விற்பனையை பொறுத்தவரையில் புதிய தந்திரங்களையும் புதிய நடைமுறைகளையும் புதிய அணுகுமுறைகளையும் தான் கையாள வேண்டும். நிறைய விளம்பரங்கள் பிடிக்கப் பாருங்கள். விற்பனையை அதிகரிக்க அதுவும் ஒரு ஆதாரமாகும். அமெரிக்கா, ஆஸ்திரேலியா வரை எங்கு தமிழர்கள் உள்ளார்களோ அங்கெல்லாம் பத்திரிகையைப் பரப்ப முயல வேண்டும். நல்ல செய்தியோடு நல்ல Features களும் இருந்தால் பத்திரிகை நிச்சயம் சேர்க்குலேஷன் பிடித்துவிடும். எழுதும் எந்த விடயமும் சப்பென்று இரா மல் விறுவிறுப்பாக இருக்க வேண்டும். சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருக்க வேண்டும். Informative ஆகவும் இருக்க வேண்டும். முயன்று பார்க்கலாம்.

“ஆரம்பத்தில் என் பெயரை எந்த வகையிலும் பாவிக்க வேண்டாம். யார் எழுதுகிறார்கள் என்ற கேள்விக்குறி வாசகர்களிடையே எழுந்து,ஏழெட்டுப் பத்திரிகை இதழ்கள் வெளிவந்த பின்னர் என்னுடைய பெயரை பகிரங்கப்படுத்தலாம். எனக்குப் பேரும் புகழும் எந்த வகையிலும் அவசியமில்லை. என் பெயருக்கு உரிய இடம் கொடுக்கவில்லை என்று நீங்களோ தம்பிமாலியோ எந்த வகையிலும் மனச்சங்கடத்துக்கு உள்ளாக வேண்டியதில்லை. முயற்சி வெற்றி வெற்றி பெற்றால் மட்டும் எனக்குப் போதும். நான் சந்தோசம் அடைவேன். நீங்கள் இருவரும் பெயர் பெற்றால், புகழ் பெற்றால் நானும் மகிழ்ச்சி அடைவேன். தற்போதைக்கு என்னை back ground இல் வைத்துக்கொள்ளுங்கள்.

“இன்னும் எழுதுவதற்கு எவ்வளவோ எண்ணங்கள் மனதில் அலை மோதுகின்றன. முக்கியமாக என்னென்ன புதிய அம்சங்களைச் சேர்க்கலாம் என்பதில் ஆயிரம் சிந்தனைகள் உதிக்கின்றன. பின்னர் எழுதுகிறேன்.

“இறுதியாக ஒரு வார்த்தை சொல்லி முடிக்க விரும்புகிறேன். பத்திரிகையை வெளியிடுவது என்பது ஒரு பாரமான முயற்சி. இதற்குப் போதிய பணபலம் வேண்டும். நல்ல படியாக, ஒரு தாராளமான முதலீட்டுக்கு ஏற்ற அத்திவாரத்தைப் போட்டுக்கொண்டு ஆரம்பியுங்கள். இடையில் நிதிக்காகக் கையைப் பிசைந்து கொண்டு நிற்கும் நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. இது என் முன்னெச்சரிக்கை. உங்கள் முயற்சி வெற்றி பெற நல்வாழ்த்துக்கள்!”

***

“முடிக்கு முன் ஒரு விடயம். தங்கள் பத்திரிகை முயற்சிக்கு உங்கள் மனைவியின் ஆதரவும் ஒத்துழைப்பும் உண்டா? வெற்றிக்கு இது மிக மிக அவசியம். பத்திரிகை வெளியிடுவது என்பது ஒரு இலட்சியப் பணி. மனதிற்கு பெரும் திருப்தியை தரக்கூடிய ஒரு சிருஷ்டித் தொழில். நன்றாக அமைந்துவிட்டால் பொன் சுரங்கம் போல நிறைய வருமானமும் புகழும் தரக்கூடிய ஒரு தொழில். உங்கள் அருமை மனைவியும் ஓர் ஆடற்கலைஞராக இருப்பதால், பத்திரிகையின் பரிமாணத்தை அவர் அறிந்திருப்பார் என்றே நம்புகிறேன்.”

– இப்படி எல்லாம் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் சிவநாயகம் ஐயா தன் கைப்பட எழுதியிருக்கின்றார்.

அவர் கையெழுத்தில் எனக்கும் பிடித்த அம்சங்கள் நாளையும் தொடரும்.

(வளரும்......)

# வலி.வடக்கில் காணி கையகப்படுத்தல் நிலைமைகளை சுமந்திரன் ஆராய்ந்தார்



வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் கடந்த ரணில் – மைத்திரி அரசு காலத்தில் விடுவிக்கப்பட்ட காணிகள் மீண்டும் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்படுகின்றன எனக் கிடைத்த தகவலை அடுத்து நேற்று (திங்கட்கிழமை) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

வலி வடக்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட காங்கேசன்துறைப் பகுதியில் இராணுவம் விடுவித்த காணியை சுற்றி நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) முட்கம்பி வேலிகள் அடைத்தார்கள். இந்தத் தகவலை அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற வலி. வடக்குப் பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் வேலி அமைக்கும் பணிகளை இடைநிறுத்தியிருந்தார்.

வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தனின் அழைப்பின் பேரிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று வலி.வடக்கு காங்கேசன்துறைப் பகுதிக்கும் மற்றும் மயிலிட்டி, பலாலி பகுதிகளின் மக்களின் பழைய குடியிருப்புகள் உள்ள அடையாளங்கள் இராணுவத்தால் அண்மையில் அழிக்கப்பட்ட இடத்தையும் சென்று நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்.

இந்த விஜயத்தின்போது வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தனும் சென்றிருந்தார்.

# தாமதமின்றி தேர்தல்களை உடனடியாக நடத்துங்கள்!

## சஜித் விடாப்பிடி



மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை எந்த தாமதமுமின்றி நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

பொத்துவில் வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் தேர்தல்கள் மக்களின் துடிப்பை சரிபார்க்கும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார். மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்துவதன் மூலம், இந்த நாட்டின் மக்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உட்பட அனைவரும் அறிய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் குறிக்கோள் என்கிறார் நாமல்



மக்களை மையப்படுத்திய பொருளாதாரத்தை உருவாக்கி தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதே எங்கள் குறிக்கோள் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான கிராமப்புற மேம்பாட்டு முன்மொழிவுகள் தொடர்பில் இடம்பெற்ற விவாதங்களில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளவை வருமாறு –

‘2022 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் பொதுமக்களுக்கு அபிவிருத்தியின் நன்மைகளை விரைவில் கிடைக்கச் செய்வதற்காக பிராந்திய வளர்ச்சியில் கவனம் செலுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், நாட்டில் புதிய தொழில் முனைவோரை உருவாக்குவதற்கு அதிக நிதி ஒதுக்கி, கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட இருக்கின்றது.

அதன்படி, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு வழங்குவார்.

நாட்டில் உள்ளூர் தொழில்முனைவோரை உருவாக்கி, உற்பத்தி பொருளாதாரத்தின் மூலம் நாட்டை தன்னிறைவு பெறும் என்ற நம்பிக்கையுடன் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தி, தேசிய பொருளாதாரத்துக்கு வலிமை சேர்க்கப்படும்’ என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மருதனார்மட வாள்வெட்டு தாக்குதல்; கைதான ஐவருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம் மருதனார்மடம் சந்தியில் கடந்த முதலாம் திகதி பழக்கடை வியாபாரி ஒருவரை தாக்கிய சம்பவம் குறித்து கைது செய்யப்பட்ட ஐவரையும் எதிர்வரும் 06ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதனார்மடம் சந்தியில் பழக்கடை நடத்தும் 04 பிள்ளைகளின் தந்தை ஒருவர் மீது கடந்த முதலாம் திகதி வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

குறித்த சந்தேகநபர்களிடமிருந்து 3 வாள்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் 06 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனிடையே, யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்கள் சிலவற்றை நாட்டிலிருந்து தப்பித்து, இந்தியாவுக்கு சென்ற சிலரே வழிநடத்துகின்றனர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



நேற்று உலக சுற்றுலா தினம்

கலாநிதி திருமதி சுபாஜினி உதயராசா
சிரேஷ்ட விரிவுரையாளர்
புவியியற்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# உலகளவில் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சுற்றுலாத்துறை

(நேற்றைய தொடர்ச்சி)

**வேலைவாய்ப்பு அதிகரிக்கின்றது**

சுற்றுலாத் துறையானது சேவையை மையமாக வைத்து செயல்படும் தொழிற்கூடம் ஆகும். இதுவும் முழுக்க முழுக்க தொழிலாளர்களைக் கொண்டு செயல்படும் துறை ஆகும். இதில் பலதரப்பட்ட மக்கள் தங்கள் தகுதிக்கேற்ப பலவகையான வேலைவாய்ப்புக் களைப் பெறுகிறார்கள். வேலையற்ற பட்டதாரிகள் சுற்றுலாவின் பல்வேறு துறைகளில் வேலை வாய்ப் பினை பெற்றுள்ளார்கள். இவ்வாறு லட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கும் சுற்று லாத்துறை வேலை வாய்ப்பை வழங்கும் 'அமுதசுரபி' யாக உள்ளது. சிறப்பாக குறிப்பிட்டால் சுற்றுலா மற்று மோர் வேலை வாய்ப்பு நிறுவனமேயாகும். சுற்றுலாத் துறையில் முதலாளி முதல் பல வகையான தொழி லாளர் வரை எண்ணற்ற மக்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் நேரடித் தொழிலாளர்கள், மறைமுகத் தொழிலாளர்கள் என இரு பிரிவுகள் உள்ளனர். சுற்றுலா முகவர், வழிகாட்டி, ஓட்டுநர், விற்பனையாளர், வர வேற்பாளர், இசைக்கலைஞர், நடனமாதர், கணக்காளர், எழுத்தாளர், உணவு தயாரிப்போர், பரிமாறுவோர், மேலாளர், தகவல் தருவோர் போன்றவர்கள் நேரடி யாக சுற்றுலாத் துறையில் பணிபுரிகின்றனர். இவர்க ளைத் தவிர ஆயிரத்துக்கும் மேற்பட்ட துணைச் சுற் றுலாத்துறைகளும் வளர்ச்சியடைந்துள்ளன. அவை களில் வேலைபார்ப்போர் மறைமுகத் தொழிலாளர் ஆவர். நட்சத்திர ஹோட்டல்களின் கட்டுமானப் பொறி யாளர்கள், தொழிலாளர்கள், பஸ், ரயில் விமானங்க



ளில் பணிபுரியும் பல வகைத் தொழிலாளர்கள், படம் எடுப்போர், கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்வோர், விற்பவர்கள் போன்ற அனைத்துத் தொழி லாளர்களும் மறைமுகமாக சுற்றுலாத் துறையில் வேலைவாய்ப்பினைப் பெறுகிறார்கள். இவ்வாறு சுற்றுலா மூலம் தொழில் திறமை உள்ளவர்களும் திறமை இல்லாதவர்களும் வேலை வாய்ப்பினைப் பெறுகிறார்கள். சுற்றுலாத் துறைக்குள் அடங்கும் ஒவ் வொரு துறையும் மக்களிற்கு வேலைவாய்ப்பினை அளிக்கிறது. இவ்வாறு சுற்றுலா வேலைவாய்ப்பினை அளித்து நாட்டில் நிலவும் தொழில் உலகம் முழுவதும் 10 கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பினை உருவாக் கும் என்று கூறப்படுகிறது.

**கைத்தொழில் வளர்ச்சி**

சுற்றுலாவினால் தொழில்களும், கைத்தொழில் களும் வளர்ச்சியடைகின்றன. உள்ளூர் கைவினைப் பொருள்கள் புத்துயிர் பெறத் துணைபுரிகின்றது. பொது வாக சுற்றுலாப் பயணிகளே அரிய கலைப் பொருள் களையும், பொம்மைகள், பனையோலைப்பைகள் போன்றவற்றை நினைவுப் பொருள்களாக வாங்கிச் செல்கின்றனர். எடுத்துக்காட்டாக இந்தியாவில் சுற்று லாத் துறையினால் கைவினைப் பொருள்கள் அதிக அளவில் விற்பனையாகின்றன. தஞ்சை தலையாட்டி பொம்மைகள், தஞ்சை கலைத் தட்டுகள், கன்னியா குமரியில் உள்ள கிளிஞ்சல் பொருள்கள், சந்தன மாலை கள், மூங்கில் கூடைகள், பனைஓலைத் தொப்பிகள் ஆகியவைகள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் விரும்பி வாங்கப்படுகின்றன. இதனால் இத்தொழில் கள் நசித்துப் போகாமல் பாதுகாக்க முடிவதுடன் அந்தத் தொழில் செய்யும் அநேகக் குடும்பங்களின் பிழைப் பிற்கும் வழி ஏற்படுகிறது.



**பொருளாதார ஏற்றத் தாழ்வு குறைகிறது**

சுற்றுலா, நாடுகளிற்கிடையே நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வை ஓரளவு குறைக்கிறது. பெரும்பாலும் பணக்கார நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பொருளாதா ரத் துறையில் பின் தங்கிய நாடுகளுக்குப் பயணம் செய்கின்ற போது அவர்களது பணம் பின்தங்கிய நாடுகளின் பொருளாதாரத்தை உயர்த்தப் பயன்படுகிறது. சுற்றுலாவை வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் ஒரு நாடு பெருந்தொகையை நேரிடைவரி மூலமும் பெறுகிறது. ஒரு நாடு எந்த அளவிற்கு அயல் நாட்டுப் பயணிகளைக் கவர்ந்திழுக்கிறதோ அந்த அளவிற்கு அந்த நாடு அந்நிய செலவாணியைப் பெறுகிறது. அந்த வெளிநாட்டுப் பயணிகள் எத்தனை நாள் தங்கு கின்றனரோ, எவ்வளவு பொருள்கள் வாங்குகின்ற னரோ அந்த அளவிற்கு தேசிய பொருளாதாரத்தை உயர்த்த முடியும். இதனால் உலகநாடுகளுக்கிடையே காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வு ஓரளவு குறைகிறது.

**வணிகச் சமநிலை பேணப்படுகிறது.**

ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு பிற நாடு களுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களின் மொத்த மதிப்பும், பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களின் மொத்த மதிப்பும் சம அளவில் இருந்தால் அதனை நாம் பன்னாட்டு வணிகச் சமநிலை என்கி றோம். அதே சமயம் ஏற்றுமதிப் பொருள்களின் மொத்த மதிப்பு இறக்குமதிப் பொருள்களின் மதிப்பைக் காட்டிலும் அதிகமாக இருந்தால் அதனை நாம் சாதக மான வணிகச் சமநிலை என்கிறோம். அதற்கு மாறாக ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பைக் காட்டிலும் இறக்குமதிப் பொருள்களின் மொத்தமதிப்பு கூடுதலாக இருப்பின் அதனை நாம் பாதகமான வணிகச் சம நிலை என்கிறோம். பொதுவாக வளர்ச்சியடைந்த நாடுகள் சாதகமான வணிகச் சமநிலையையும், வளர்ந்துவரும் நாடுகள் பாதகமான வணிகச் சம நிலையையும் கொண்டுள்ளன. பாதகமான வணிகச் சமநிலையை விரைவில் சீர்செய்யாவிடில் நாட்டின் பொருளாதாரநிலை பாதிக்கப்படும். இதற்கு மிகவும் கைகொடுப்பது கண்ணுக்கு புலனாகாத ஏற்றுமதிகள் ஆகும். கண்ணுக்குப் புலனாகாத ஏற்றுமதி களில் சுற்றுலா முக்கியமான இடம் வகிக்கிறது.

**கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் பேணிக்காக்கப்படுகின்றன**

சுற்றுலா கலை மற்றும் கிராமியக் கலைக ளைப் பேணிக்காப்பதற்கு உதவுகிறது. சுற் றுலாத் துறையானது நம் நாட்டின் பண்பாடு, கலாசாரம், கலைகள், கிராமியக் கலைகள் ஆகியவற்றைப் பேணிக்காக்கும் வகையில் கண்காட்சிகள், திருவிழாக்கள் போன்றவை களை நாடு முழுவதும் நடாத்திவருகின்றது. இது போன்ற கலைக்கூடங்களில் பண்பாட் டிற்கே உரித்தான நடனக்கலைகள், நாட்டியக் கலைகள், கிராமியக் கலைகள் இடம்பெறு கின்றன. இதனால் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றனர்.

**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள் பேணிக்காக்கப்படுகின்றன**

பொதுவாக சுற்றுலாப் பயணிகள் ஒரு நாட்டின் நாகரிகம், பண்பாடு, கலை, ஆகியவற்றை வெளிப்ப டுத்தும் பழங்காலச் சின்னங்களைப் பார்க்க வேண் டும் என்பதிலே ஆவல் கொள்ளுகின்றனர். நினைவுச் சின்னங்களைப் பார்க்கும் போது அதனை உற்று நோக்கி அதனோடு கலந்துவிடுகிறார்கள். இதில் அவர் களிற்கு நிம்மதியும், திருப்தியும், புதிய உற்சாகமும் ஏற்பட்டு நல்ல அனுபவங்களைப் பெற்றுத் திரும்பிச் செல்கின்றனர். எனவே ஒவ்வொரு அரசும் தங்கள் நாட்டிலுள்ள பழங்காலக் கலை மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டியது அத்தியாவசி யமான ஒன்றாகக் காணப்படுகிறது. இவ்வாறு சுற்று லாவினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங் கள் பேணிப்பாதுகாக்கப்படுகின்றன.

**பண்பாட்டுப் பரிமாற்றம்**

சுற்றுலாப் பயணிகள் நாகரிகம் பண்பாடு ஆகிய வற்றைப் பிற மக்களிடம் பரப்புகிறார்கள். இதனால் இரண்டு மாறுபட்ட பண்பாடு கொண்டவர்கள் ஒன்று சேர்கிறார்கள். மற்றவர்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறிய மனிதன் முற்பட்டதனால்தான் சுற்றுலாவே தோன்றியது. சுற்றுலாவினால் ஒரு நாட்டு நாகரிகம் இன்னொரு நாட்டில் பரவ வாய்ப்புள்ளது. அதே நேரம் அந்த நாட் டின் பழமை, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை நிலை நிறுத்திக்கொள்ளவும் வழிவகை செய்கிறது.

(09ஆம் பக்கம் பார்க்க)



# கொஹுவல மற்றும் பாமன்கடை நகரங்களில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு



கொழும்பு - ஹொரண வீதியில் பாமன்கடை - ஸ்ரீ சம்புத்த ஜெயந்தி மாவத்தை - டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை ஊடாக வெள்ளவத்தை வரை 4 வழிப் பாதையாக விரிவுபடுத்தப்பட்டு மேம்படுத்தப்படும் வீதியின் நிர்மாணப்பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன என ஆளும் தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த வீதியை விஸ்தரித்து அபிவிருத்தி செய்தல் மற்றும் பாமன்கடை பாலத்தை விஸ்தரித்தல் என்பவற்றின் மூலமாக தற்பொழுது பாமன்கடை - ஸ்ரீ சம்புத்த ஜெயந்தி மாவத்தை ஊடாக ஒரு வழியாக பயணம் செய்யும் வாகனங்களுக்கு இருதிசைகளிலும் பயணம் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும் . அத்தோடு கொஹுவல மற்றும் பாமன்கடை நகரங்களில் காணப்படும் கடும் போக்குவரத்து நெரிசலுக்கு இதன் மூலமாக தீர்வு கிடைக்கும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

வீதியின் இந்த பகுதிகளையும் விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்தல் மற்றும் பாமன்கடை பாலம் நிர்மாணிப்பு என்பன வீதி அபிவிருத்தி அதிகாரசபை சபையின் தெற்கு வீதி இணைப்புத் திட்டத்தால் முன்னெடுக்கப்படுகிறது. இதற்கு 21 கோடி ரூபா செலவாகும் என்று விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் மேலும் கூறினார்.

# உலகளவில் பொருளாதாரத்தை ....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)



### தனிமனித அறிவு பெருகுகிறது

சுற்றுலாவினால் தனிமனித அறிவு பெருகுகிறது. பிற நாடுகளுக்கும், தனது நாட்டின் பிற பகுதிகளுக்கும் செல்வதால் சுற்றுலாப் பயணியின் பொது அறிவு வளர்ச்சியடைகிறது. தனிப்பட்ட முறையாக நேரடியாகப் பார்த்து, கேட்டு தெரிந்து கொள்ளுவதால் அறிவு விருத்தியடைகிறது. இவ்வாறு சுற்றுலா மனிதர்களின் அறிவை விருத்தி செய்து கொள்வதற்கு பெரிதும் உதவுகிறது.

### மகிழ்ச்சி அளிக்கிறது

சுற்றுலா மனிதனுக்கு மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. மனிதரின் மனதுக்கு மன மகிழ்ச்சி தரும் சுற்றுலா மனிதனின் உடல் நலத்தையும் பேணுகிறது. இதனால் சமுதாயம் நலன் பெறுகிறது. சமுதாயத்தில் ஏற்படும் பல தீய விளைவுகள் இதனால் தடுக்கப்படுகின்றன.

### விலங்குகள் மற்றும் தாவர வகைகள் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன

சுற்றுலாவினால் விலங்குகள் மற்றும் தாவர வகைகள் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. வெளிநாட்டுப் பயணிகள் பல்வேறு காரணங்களிற்காக நமது நாட்டிற்கு வருகை தந்தாலும் இயற்கை வளங்களைக் கண்டு ரசிப்பதிலும், பல அரிய தாவர இனங்களையும், விலங்குகளையும் கண்டு உற்சாகம் அடைகின்றனர். எனவே பறவை சரணாலயங்கள், வனவிலங்கு சரணாலயங்களை முறைப்படி பாதுகாப்பதிலும், இயற்கை எழில்களைப் பேணிப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது.

### சுற்றுலாவினால் ஏற்படும் தீமைகள்

சுற்றுலாவினால் மனித நேயம், தேசிய ஒருமைப்பாடு, நல்லெண்ணம், உலக ஒற்றுமை ஆகியன. மலர்ந்தாலும் சுற்றுலாவினால் தீமைகளும் உண்டாகின்றன. சுற்றுலாப் பயணிகள் சுற்றுலா மையங்களைத் தரிசிக்கும் போது அப்பிரதேசங்களின் வரலாற்று அம்சங்களை சிதைப்பதனால் எதிர்காலத்தில் அப்பிரதேசங்கள் பாதிப்படைய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. சுற்றுலா மையங்களில் மிதமிஞ்சிய சனநெருக்கடி, அவர்களை ஏற்று வழியனுப்பக்கூடிய வசதி வாய்ப்புகள் போதாமையால் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டவர்களுக்கும், சுற்றுலா மையப் பிரதேசம் அமைந்துள்ள கிராம அல்லது அப்பிரதேச மக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அத்துடன் அளவிற்கு அதிகமான பயணிகள் வருகையினாலும் வாகனங்களில் ஏற்படும் மாசுக்களால் (புகை, இரைச்சல், அதிக ஒலி) சுற்றுப்புறச் சூழல் மாசடைகின்றது. சுற்றுலா மேற்கொள்ளும் பயணிகள் வரலாற்றுச் சின்னங்களைத் தொட்டும், சிலர் ஓவியங்களைத் உரசிப்பார்ப்பதாலும், தமது பெயர்களைப் பொறிப்பதாலும் கலைப் படைப்புக்கள் பாதிக்கப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளின் பழக்கவழக்கங்கள் உள்நாட்டு கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பாதிக்கின்றது. குறிப்பாக உணவுப்பழக்கவழக்கங்கள் உள்நாட்டு உணவுகளை விடுத்து மக்கள் வெளிநாட்டுப் பொதிசெய்யப்பட்ட உணவுகளையும், திடீர் உணவுகளையும் உண்பதற்குப் பழக்கப்பட்டுவிட்டார்கள். இதனால் நீண்டகாலப் போக்கில் மனிதன் பல்வேறுபட்ட நோய்களுக்கும், துன்பங்களுக்கும் உள்ளாகின்றான். இதனை விட போதைவஸ்துப் பாவனை, விபச்சாரம், ஓரினச்சேர்கை, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற சமூகத்தினால் விரும்பத்தகாத செயற்பாடுகளையும் உள்வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தினால் பல்வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

### இலங்கையில் சுற்றுலாத்துறை

சுற்றுலாத்துறைக்கு பெயர்பெற்ற நாடுகளில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது. இங்கு ஆடைக் கைத்தொழிலுக்கு அடுத்த நிலையில் சுற்றுலாத்துறை காணப்படுகிறது. இலங்கையில் நிலவுகின்ற உவப்பான வானிலை நிலைமைகள் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்துள்ளன. இயற்கை அழகுடன் கூடிய கடற்கரைகள், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள், தேசிய வன விலங்கு சாலை, தேசியப் பூங்காக்கள் போன்ற சுற்றுலா பகுதிகள் இலங்கையில் பிரபல்யம் பெற்றுள்ளன. இந்நாட்டுக்கே உரித்தான கைப்பணிப் பொருள்கள், ஆயுள்வேத மருந்துகள், சமையற் கலைகள் (உணவுகள் - ஒடியற் கூழ், பனாட்டு, புளுக்கொடியல், பனங்கட்டி) சம்பிரதாய மரபுகள் போன்றனவும் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்துள்ள விடயங்களாகும். உவப்பான காலநிலையைக் கொண்ட நுவரெலியாவிற்கு ஏப்ரல் மாதத்திலும், சமயத்துடனும், பொழுதுபோக்குடனும் தொடர்புடைய சிவனொளிபாத மலைக்கு மார்ச் மாதம் முதல் யூலை மாதம் வரையிலும், மே மற்றும் யூன் மாதங்களில் அநுராதபுரத்திற்கும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் பயணிக்கின்றனர். தென்னிலங்கையில் வாழ்பவர்கள் வட இலங்கைக்கான சுற்றுலாவை அதிகளவில் விரும்புகின்றனர். உலக சுற்றுலா நிறுவனத்தினால் உலகில் சுற்றுலாவை மேற்கொள்ளலாம் என அடையாளப்படுத்தப்பட்ட 302 பாரம்பரிய அமைவிடங்களில் ஆறு (06) அமைவிடங்கள் இலங்கையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கு 1937ஆம் ஆண்டு சுற்றுலாப் பணியகம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் பின் 1966ஆம் ஆண்டு இலங்கை சுற்றுலா சபை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. 1973ஆம் ஆண்டு முதலாவது ஐந்து நட்சத்திர ஹோட்டல் நிறுவப்பட்டது. இவை யாவும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கான மைல் கற்களாகும். 1948ஆம் ஆண்டு ஏறத்தாழ 21,000 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இலங்கையில் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 லட்சத்து 44 ஆயிரத்து 328 சுற்றுலாப்பயணிகள் வருகை தந்திருந்தமையுடன், 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 71 ஆயிரத்து 370 சுற்றுலாப் பயணிகள் மாத்திரமே வருகை தந்திருந்தனர். 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 166,975 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்திருந்த நிலையில் 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு சுற்றுலாப் பயணி கூட நாட்டிற்கு வருகை தரவில்லை என இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கின்றது. 2019ஆம் ஆண்டு முழுமையாக இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,913,702 பேர் ஆக காணப்பட இது 2020 ஆம் ஆண்டு முழுமையாக 507,704 பேராகவே காணப்பட்டது. 2020ஆம் ஆண்டு மார்கழி மாதம் மட்டும் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெறும் 393 பேரே ஆகும். இலங்கைக்கு 2020ஆம் ஆண்டு ஏப்ரல், மே,யூன், யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர், ஒக்டோபர், நவம்பர் ஆகிய எட்டு மாதங்களில் கொவிட் - 19 தொற்றுக் காரணமாக ஒரு சுற்றுலாப் பயணி கூட வருகை தரவில்லை. இலங்கைக்கு அற்றிய செலவாணியை பெற்றுத் தரும் பிரதான துறையாக சுற்றுலாத்துறை விளங்குகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு வகையான வேலைவாய்ப்புக்களை சுற்றுலாத்துறை வழங்குகின்றது. 1998ஆம் ஆண்டு 14,816 மில்லியன் ரூபாவினை அந்நியச் செலவாணி யாகப் பெற்றுள்ளது. இலங்கை வரலாற்றில் சுற்று லாத்துறை மூலம் அதிக அளவிலான வருமானம் கிடைத்த ஆண்டாக 2018ஆம் ஆண்டு பதிவாகியுள் ளது. 2018ஆம் ஆண்டில் 2,333,796 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தமையுடன் அவர்களின் ஊடாக அந்த ஆண்டு 4,380.6 மில்லியன் அமெரிக்காடொலர் வருமானம் கிடைத்திருந்தது. அதேவேளை 2019ஆம் ஆண்டு, சுற்றுலாத்துறை மூலம் இலங்கைக்கு 3,606.9 மில்லியன் அமெரிக்கா டொலரும் 2020ஆம் ஆண்டு 682 மில்லியன் அமெரிக்கா டொலரும் வருமானமாகக் கிடைத்துள் ளது. வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்ந்த இலங்கையின் சுற்றுலாத்துறை மீண்டும் பாரிய பின்னடைவை நோக்கி நகர்ந்துள்ளமை, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளின் மூலம் காணக்கூடியதாக உள்ளது. 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையில் இளைஞர் கிளர்ச்சி (து.ஏ.) காரணமாக இத்தொழிற்துறையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து 1983ஆம் ஆண்டு யுலை மாதத்தில் ஏற்பட்ட இனப் பிரச்சினை காரணமாகவும் 1996இல் ஏற்பட்ட மத்திய வங்கி மீதான குண்டுத் தாக்குதல், மற்றும் சுற்றுலா மையங்களில் காணப்பட்ட பதற்ற நிலைமை, 30 வருடகாலமாக நிகழ்ந்த உள்நாட்டு யுத்தம், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதல்கள, உலகில் 2019ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸின் தாக்கம் இலங்கையிலும் 2020 மார்ச் மாதத்திற்குப் பின்பு மோசமான நிலைமை போன்றன காரணமாகவும் சுற்றுலாத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### முடிவுரை

சுற்றுலா மனித வாழ்வுடன் இணைந்து, பிணைந்து சாதி, மத, நிற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மனித நேயத்தையும், உலக மக்களிடையே நல்லெண்ணங்களையும் வளர்க்கிறது. ஒரு நாட்டின் அந்நியச் செலாவணியைப் பெருக்கி, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி ஏற்படுத்துகிறது. இது இன்று வளர்ந்து வரும் ஒரு முக்கியமான தொழிலாகும்.

# ‘ட்ரோன்’ பறக்க விட்ட இரண்டு பேர் கைது!

சட்டவிரோதமாக ‘ட்ரோன் கமரா’ ஒன்றை வானில் பறக்கச் செய்த இரண்டு பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மிரிஹான பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அந்த ட்ரோன் கமரா பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மிரிஹான பொலிஸ் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட நுகேகொட மணல் பூங்காவில் குறித்த சந்தேகநபர்களினால் ட்ரோன் கமரா பறக்கவிடப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஹாரகம பிரதேசத்தைச் சேர்ந்த 32 மற்றும் 33 வயதான இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இன்று கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

# இரண்டு குழுக்களுக்கு இடையில் திருமலை குச்சவெளியில் மோதல்

## சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

திருகோணமலை-குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில்இரண்டுகுழுக்களுக்கிடையில் ஏற்பட்ட சண்டையில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களையும் இம்மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் நேற்று (திங்கட்கிழமை) உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஐந்தாம் வட்டாரம்- திரியாய், குச்சவெளி பகுதியைச் சேர்ந்த 18, 20, 21மற்றும் 23 வயதுடைய நான்கு இளைஞர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குச்சவெளி பிரதேசத்தில் இரண்டு இளைஞர் குழுக்களுக்கிடையில்நீண்டகாலமாக இருந்து வந்த பகைமை காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கங்கள் பின்னர் கைகலப்பாக மாறியதில் இருவர் படுகாயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் சம்பவங்களுடன் தொடர்புடைய இரு குழுவிலும் இருந்து நால்வரைக் கைது செய்த பொலிஸார், திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டார். மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் தாதியர்கள் அடையாள பகிஷ்கரிப்பு

*பல்வேறு கோரிக்கைகளைமுன்வைத்துவவுனியா வைத்தியசாலையின் தாதியர்கள், அடையாள பணி பகிஷ்கரிப்பில் நேற்று (திங்கட்கிழமை) ஈடுபட்டனர்.*

*குறிப்பாக அனைத்து ஊழியர்களுக்கும் கொரோனாக்காலவிசேட கொடுப்பனவாக 7 ஆயிரத்து 500 ரூபாவை உடனடியாக வழங்குதல், விசேட விடுமுறை நாள்களில் கடமைக்குச் சமுகமளித்தால் அதற்கான கொடுப்பனவை வழங்கல் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான கொரோனா கால பாதுகாப்பு அங்கிகள் மற்றும் முகக்கவசங்கள் போன்றவற்றை உடனடியாக வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் இடம்பெற்றது.*

*நேற்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய பகிஷ்கரிப்பு போராட்டம், மதியம் 12 மணிவரை இடம்பெற்றது.*

*ஆனாலும், அவசர நோயாளர்களுக்கான உயிர்காப்பு சிகிச்சைகள் அனைத்தும், வழமை போல இடம்பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.*

*இதேவேளை எமது கோரிக்கைகளுக்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிடின், தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படும் என தாதிய உத்தியோகத்தர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.*

# பாடசாலைகள் ஆரம்பித்தால் தவணைவிடுமுறைகிடையாது

ஒக்டோபர் மாதம் முதல் பாடசாலைகளை கட்டங்கட்டமாக திறப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டால் வழமையாக வழங்கப்படும் டிசெம்பர் மாத விடுமுறை இம்முறை வழங்கப்படமாட்டாது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அதேவேளை, பாடசாலைகளை நான்கு கட்டங்களாகஆரம்பிப்பதற்குதிட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி 200 இற்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் விரைவில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டிலே 200 இற்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் 5,131 பாடசாலைகள் உள்ளன எனவும், அவற்றில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகள் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 3,884 எனவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த வகையில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகள் உள்ள பாடசாலைகளை திறக்க முடியும் என்ற நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

# நாட்டில் வர்த்தக மாபியாக்களை அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை

## இராதாகிருஷ்ணன் காட்டம்



வர்த்தக மாபியாக்களை கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே அரசாங்கம் இருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வே. இராதாகிருஷ்ணன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

நாட்டில் பொருள்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன.

கொரோனா மற்றும் டொலர் தட்டுப்பாட்டால் மாத்திரம் இந்த நிலைமை ஏற்படவில்லை. அமைச்சுகளில் இடம்பெறும் ஊழல்களும் இதற்குப் பிரதான காரணமாகும். சீனி, எண்ணெய், வெள்ளைப்பூடு என எல்லாவற்றிலும் ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன.

அதேபோன்று வர்த்தக மாபியாக்களைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் சட்டங்களை கொண்டுவந்தாலும், அவை அமுலுக்கு வருவதைக் காண முடியவில்லை.

அத்துடன் வர்த்தக மாபியாக்கள், பொருள்களின் விலைகளை அதிகரிப்பதால்பொதுமக்களுக்கே பாதிப்பு ஏற்படுகின்றது. என அவர் தெரிவித்துள்ளார்.

# பண்டாரநாயக்கவின் கொள்கைகளை பாதுகாத்தே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்னோக்கி பயணிக்கும்

## அதன் தலைவர் மைத்திரி திட்டவட்டம்



பண்டாரநாயக்கவின் கொள்கைகளைப் பாதுகாத்துக்கொண்டே சுதந்திரக் கட்சி முன்னோக்கிப் பயணிக்கும் என அக்கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 62 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

எனவே, பண்டாரநாயக்கவின் வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் என்பது இந்த நாட்டின் எதிர்காலம் என்றும் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

மேலும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கிச் செயற்பட்டு வருகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.



# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள் பணிபுறக்கணிப்பு

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் பணிபுறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

நேற்று (திங்கட்கிழமை) காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 12 மணிவரை இந்த பணிபுறக்கணிப்பை மேற்கொண்டிருந்தனர்.


நாடளாவியரீதியில் தாதியர் சங்கத்தினர் புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளார்கள். 44 தொழில் சங்கங்களும் இணைந்து இந்தத் தொழில் சங்க புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர்.

6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. கொரோனா காலத்தில் தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல், இந்த காலத்தில் மேலதிக நேர விசேட கொடுப்பனவை கட்டுப்பாடு இன்றி வழங்குதல், வடமாகாண சுகாதார ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குப் பெற வந்தவர்களுக்கு இடையூறு எதுவும் இன்றியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# புலம்பெயர் தமிழ் அமைப்புகள் கோட்டாவுடன் பேச நிபந்தனை

## சர்வதேச மத்தியஸ்தம் மிக அவசியம் என வலியுறுத்து; பொறுப்புக்கூறலில் உள்ளகப் பொறிமுறைக்கு எதிர்ப்பு



தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேசத் தயார் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவில் தெரிவித்திருந்த நிலையில், சர்வதேச மத்தியஸ்தம் மூலம், இலங்கை அரசுடன் பேச்சு நடத்தலாம் என்று புலம்பெயர் நாடுகளைத் தளமாகக் கொண்டு இயங்குகின்ற பிரதான மான 08 புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தீர்மானம் எடுத்துள்ளன.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேசத் தயார் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளருடன் நடத்திய சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக கனேடிய தமிழர் தேசிய பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை, ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், நோர்வே ஈழத் தமிழர் அவை, அயர்லாந்து தமிழர் பேரவை, தென்னாபிரிக்கா அமைதி மற்றும் நீதிக்கான ஒற்றுமை குழு, பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை, அமெரிக்க தமிழர் செயற்பாட்டுக் குழு ஆகிய 8 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் கூட்டாகக் கருத்து வெளியிட்டுள்ளன.

உலக நாடுகளில் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நோர்வே, ஐக்கிய இராச்சியம், கனடா, பிரான்ஸ், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, அயர்லாந்து ஆகிய நாடுகளைத் தளமாகக் கொண்டு இயங்கும் இந்த எட்டு அமைப்புகளும் புலம்பெயர் அமைப்புக்களில் மிக முக்கியமானவை.

பிரித்தானியா, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளில் ஒன்று அல்லது இணைந்த சர்வதேச மத்தியஸ்தம் மூலம் இலங்கை அரசுடன் பேச முடியும் என்று இந்த எட்டு புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தீர்மானம் எடுத்துள்ளன.

ஆனால், பொறுப்புக்கூறலில் உள்ளகப் பொறிமுறை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்கின்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டை முற்றாக நிராகரிப்பதாகவும் இந்த எட்டு புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் முடிவெடுத்துள்ளன.

ஜனாதிபதியின் அழைப்பு தாராள மனப்பான்மையின் வெளிப்பாடாக இருக்க முடியும் என்று நாம் நம்பவில்லை. சர்வதேச சமூகம் ஸ்ரீலங்காவுக்கு எதிரான நிலைப்பாட்டில் மிக இறுக்கமாக உள்ளது. சர்வதேச சமூகத்தை இந்நிலைப்பாட்டுக்கு கொண்டு சென்றதில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பங்கும், பங்களிப்பும் காத்திரமானவை. ஆகவேதான், இலங்கை ஜனாதிபதி புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேச்சு நடத்த தயார் என்று பந்து ஒன்றை வீசி உள்ளார். ஜி. எஸ். பி. பிளஸ் சலுகைகள், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் நிறுத்தப்படலாம் என்கிற பாரிய அச்சம் இலங்கைக்கு தொற்றியுள்ளது என்றும் இந்தப் புலம்பெயர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதேநேரம், அரசியல் கைதிகள் நிபந்தனை இன்றி விடுவிக்கப்பட வேண்டும், வடக்கு, கிழக்கில் படைத் தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும், பௌத்த ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்பட வேண்டும், காணாமல் போனோர் பிரச்சினைக்குத் தீர்வு தரப்பட வேண்டும், உள்ளூர் தமிழ்த் தலைமைகளுடனும் பேச்சு நடத்தப்பட வேண்டும் ஆகிய விடயங்களை நடைமுறைப் படுத்தி நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் இந்தத் தரப்புக்கள் கருத்துரைத்துள்ளன.

# சர்வதேசத்தின் தலையீட்டை ஒருபோதும் ஏற்கமாட்டோம்!

## நாடு திரும்பிய பீரிஸ் திட்டவட்டம்

உள்நாட்டுப் பிரச்சினைகளை தீர்க்கும் பொறுப்பை சர்வதேசத்திடம் ஒப்படைப்பதற்கு இலங்கை ஒருபோதும் தயாரில்லை என்று வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணிய மாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், நேற்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அதன் தனித்துவங்களைப் பாதுகாத்துக்கொண்டு, இறையாண்மையுடன் வெற்றியை நோக்கிப் பயணிக்க அரசு வழிவகைகளை மேற்கொள்கின்றது.

இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையை வெற்றிகொள்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

இலங்கையின் பிரச்சினைகளை உள்ளக நிறுவனங்களின் ஊடாகத் தீர்த்துக்கொள்வதற்கு முயற்சிக்கின்றோம்

நாட்டு விவகாரங்களை வெளியக நிறுவனங்களுக்குப் பொறுப்புக் கொடுப்பதை அங்கீகரிப்பதில்லை.

ஐ.நா., அதன் சட்ட ஒழுங்குகளுக்கு அமைய அனைத்து நாடுகளையும் சமமாக மதிக்க வேண்டும் - என்றார்.

---

### 'தில்' இருந்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அம்பாறை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்போது, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நேரத்தில் தேர்தலை நடத்தினால் மக்களின் வேதனைகளைப் புரிந்து கொள்ள முடியும். இதனால் சர்வதேசத்துக்குச் சென்று தேர்தல் தொடர்பில் பொய்களைக் கூறாது, உரிய காலத்தில் தேர்தலை நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுக்கின்றேன். தேர்தலை நடத்தினால் அரசு தொடர்பாக மக்களின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள முடியுமாக இருக்கும் - என்றார்.

---

### 'டிக் டொக்'கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த இளைஞரே சுன்னாகம், நாகம்மா வீதியில் வைத்து இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்று தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

# புலம்பெயர் மக்களுடனான உறவுகள் பற்றி இலங்கை – பிரிட்டன் அமைச்சர்கள் பேச்சு



இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் பிரிட்டனின் தெற்காசியா, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான இராஜாங்க அமைச்சர் விம்பிள்டனின் பிரபு அஹ்மத் ஆகியோருக்கிடையில் முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது இலங்கையில் வர்த்தகம், துறைமுக நகரம் மற் றும் ஏனைய துறைகளில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத் துறையை மீண்டும் ஆரம்பித்தல் ஆகியன குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன் புலம்பெயர் மக்களுடனான உறவுகள் மற்றும் நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இருவரும் ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் கொரோனாத் தொற்றுப் பரவலால் தடைகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும், உள்நாட்டு நிறுவனங்களால் பல்வேறு துறைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள கணிசமான முன்னேற்றங்கள் குறித்து அஹ்மத் பிரபுவுக்கு அமைச்சர் பீரிஸ் விரிவாக விளக்கியுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு அமைச்சர் பீரிஸ், அஹ்மத் பிரபுக்கு அழைப்பு விடுத்துள்ளார் எனவும், அதனை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.